1992 ஏப்ரல் 24]

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு வந்து இறங்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் சென்னை சென்ட்ரல் ஸ்டேசனில் இருக்கிற ஆட்டோ ஓட்டுநர்களிடம் எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு ஒட்டுங்கப்பா என்று சொன்னால் யாருமே வருவதில்லை. அதை மீறிக் கேட்டாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற மரியாதை இல்லாமல் மிரட்டுகிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல சென்ட்ரலுக்கு யார் வந்து இறங்கினாலும் மீனம்பாக்கம் என்று சொன்ன உடனேயே வருகிறார்கள். எம்.எல்.ஏ. ஆஸ்டல் என்று சொன்னால் யாரும் வருவதில்லை. ஆகவே, அங்கிருந்து வருவதற்கு அந்த டிரைவர்களுக்கு அறிவுரை கூறி, எங்களை மற்றும் எங்களைப் போன்ற மற்றவர்களை அங்கிருந்து அழைத்து வருகின்ற அளவில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பிரிபெய்ட் சிஸ்டம் என்பது டாக்சிகளுக்கு, கார்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. ஆட்டோக்களுக்கு அது பேன்ற சிஸ்டங்கள் இல்லை. ஆகவே சென்ட்ரல், எக்மோர், பஸ் ஸ்டான்ட் போன்ற இடங்களில் இது போன்ற தொல்லைகள் இருக்கின்றன என்பதற்காக 'பிரீபெய்ட் சிஸ்டம்' என்ற அடிப்படையில் தனியாக 50 ஆட்டோக்களை நிறுத்தி அதில் நீங்கள் சென்ற உடனேயே கூடுதலாக 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் எவ்வளவு பிக்ஸ் பண்ணுவது என்று இன்னும் நாங்கள் முடிவு செய்யவில்லை—செலுத்துவது பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு ஆட்டோ சங்கத்தைச் சார்ந்தவர்களையும், காவல் துறையைச் சார்ந்தவர்களையும் அழைத்து வைத்து பேசி விரைவிலே அதற்கான நடவடிக்கை மேற்கொண்டு பிறகு இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இருக்காத அளவுக்கு நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 616. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 539. திரு. எஸ். எம். துரை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

539—

பெரியகோம்பை, சின்னக் கோம்பை அணைகளில் பாசன உரிமை முறைப்படுத்துதல்.

*3315— திரு. எஸ். எம். துரை:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 24

(அ) ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) தொகுதியில் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கோடல்வாலி கிராமத்தில் பெரிய கோம்பை மற்றும் சின்னக் கோம்பை அணைத் திட்டங்களில் உள்ள பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கும் புதிய ஆயக்கட்டுதாரர்களுக்கும் பாசன உரிமை முறைப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா:

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இவ்விரு திட்டங்களும் கடைமடை ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஏரிகளிலிருந்து வழிந்துபோகும் உபரித் தண்ணீர் மட்டுமே கீழே உள்ள கண்மாய்களுக்குச் செல்லும். எனவே பாசன விதிகளை முறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏழவில்லை.

(ஆ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ்.எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கோடல்வாலி கிராமத்தில் பெரிய கோம்பை, மற்றும் சின்னக் கோம்பை ஆகிய அணைக்கட்டுகளின் பழைய ஆயக்கட்டு பகுதிகள் 225 ஏக்கர் ஆகும். புதிய ஆயக்கட்டுப் பகுதி 150 ஏக்கர் ஆகும். தற்போது உபரி நீர் வருகின்ற சூழ்நிலையில் தான் புதிய ஆயக்கட்டு பகுதி விவசாயிகளுக்கு பயன்பட வாய்ப்பு உள்ளது. கட்டசின்மை நாயக்கன்பட்டி, இராமநாதபுரம், தத்தம்பட்டி, புதுப்பட்டி, சத்தம்ம நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ளவர்களுக்கு பாசன வசதி கிடைக்காத நிலையில் அவர்கள் வாழ்வு இழந்து தவிக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திர துருவமாக திகழும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் அம் மக்களுக்கு பாசன வசதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகோம்பை, சின்னக் கோம்பை இரண்டு திட்டங்களும் கடைமடையில் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே கூறியதுபோல உபரி தண்ணீர் கீழே உள்ள கண்மாய்களுக்கு செல்லலாம் என்று இருக்கிறது. ஆகவே, இந்த ஏரியை ஆண்டுக்கு இரண்டு முறை நிரப்புகின்ற திட்டம் இருக்கின்ற காரணத்தால் கீழே இருக்கிற கண்மாய்களுக்கு உபரி தண்ணீரைத்தான் விட

முடியும். ஆகவே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த அணைக் கட்டு பகுதியில் உள்ள பாசன பகுதிகள் பாதிக்காத அளவுக்கு கீழ உள்ள கண்மாய்களுக்கு உபரி தண்ணீரைத்தான விட இந்த அரசினுடைய கவனத்திற்கு பிரச்சினை வருகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவருவார்களானால் அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை பகுதி விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். நீர்வரத்து அதிகமாக வரும் நேரங்களில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் குறைவாக வரும் நேரத்தில் பழைய ஆயக்கட்டுத் தாரர்கள் பயன்பெற தமிழக மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து, நீர் விடும் இம்முறையை மறுபரிசிலனை செய்து முறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு நிலங்களைப் பொறுத்த வரையில் நாம் பொதுவாக தண்ணீர் விடுகிற காலங்களில் ஏற்கெனவே உள்ள பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு பாசனத்தைக் கொடுத்து விட்டு, பின்னாலேதான் மற்ற ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் விட முடியும். ஏனென்றால் ஏற்கெனவே அவர்களுக்கு உரிமை இருப்பதால் பிரச்சினையை உண்டுபண்ணுவார்கள். ஆகவே அவர்களுடைய பாசன பரப்புக்குப் பாதிப்பு இல்லாத வகையில் தான் விடமுடியும். ஆகவே எக்ஸ்டென்ஷன் பகுதி என்று சொல்கிற நீட்டிப்புப் பகுதிகளுக்கு, ஏற்கெனவே உள்ளவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில்தான் விடமுடியும். ஆகவே எக்சிஸ்டிங் ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில். தண்ணீர் அதிகம் வரும் காலங்களில் பிரச்சின இல்லாமல் இருப்பதால். குறைவாக வரும் காலங்களில் தான் இந்தப் பிரச்சினை எழுகிறது, ஆகவேதான் குறைவாக நீர் வரும் காலங்களில் ஏற்கெனவே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கு போதுமான அளவுக்குப் போக எஞ்சியிருக்குமானால் அதை கீழே இருக்கிற உபரி நிலங்களுக்கு தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 540. திரு. இரா. நடேசன். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.